# கிறிஸ்துவை அறிக்கைசெய்தல்

By *R.Merlin*

நாம் கேட்கிறவர்களாக மட்டும் அல்ல, சீடர்களாகவும் இருக்க வேண்டும். நாம் பார்வையாளர்களாக மட்டும் அல்ல, பங்குபெறுபவர்களாகவும் இருக்க வேண்டும். விசுவாசிப்பதற்கு இருதயத்தைத் தருகிற தேவனே, அறிக்கைசெய்வதற்கு வாயையும் தருகிறார்.

விடுதலையோடும், தைரியமாகவும் நாம் நம் விசுவாசத்தை அறிக்கைசெய்ய வேண்டும். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற எல்லாருக்குள்ளும் கிறிஸ்து இருக்கிறார். இது உண்மை. ஆனால், தனக்குள் இருக்கும் கிறிஸ்துவை ஒருவன் அறிக்கைசெய்யவில்லையென்றால் அவனை வாள்மீனுக்கு ஒப்பிடலாம். வாள்மீனின் தலையில் வாள் இருப்பதைப்போல் இவனுக்குள் கிறிஸ்து இருக்கிறார். ஆனால், தன் தலையில் இருக்கும் வாளை மீன் பயன்படுத்தாததுபோல, தனக்குள் இருக்கும் கிறிஸ்துவை அறிக்கைசெய்வதற்கு இவன் வாயைப் பயன்படுத்துவதில்லை. இருதயத்தில் விசுவாசிப்பதை அறிக்கைசெய்வதற்கு பரலோகத்திலிருந்து வருகிற பரிசுத்த தைரியம் வேண்டும்.

### கிறிஸ்துவை உறுதியாக அறிக்கைசெய்ய வேண்டும்

"நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுவதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம்" *(எபி. 4:23)* என்று அப்போஸ்தலன் அறிவுறுத்துகிறார். அந்த நாட்களில் யூதக் கிறிஸ்தவர்கள் மற்ற புறஜாதி பரிசுத்தவான்களுடன் கூடிவந்தால் சித்திரவதைக்குள்ளாக நேரிடும் என்று பயந்ததால், அவர்களுடன் கூடிவருவதைத் தவிர்த்தார்கள். எனவே, ஆசிரியர் அவர்களை உற்சாகப்படுத்துகிறார். இருதயத்தில் இருக்கும் கிறிஸ்துவை அறிக்கைசெய்ய ஒருவன் தவறினால் அவன் ஆவிக்குரிய வகையில் தடுமாறுகிறான், தள்ளாடுகிறான் என்று பொருள், தனக்குள் இருக்கும் விசுவாசத்தை அறிக்கைசெய்வதைத் தள்ளிப்போடுபவர்கள் அல்லது தவிர்ப்பவர்கள், தங்கள் விசுவாசத்தை இழக்கக்கூடிய, நாளடைவில் மறுதலித்துவிடக்கூடிய ஆபத்தும் இருக்கிறது. சாதகமான சூழ்நிலையில் மட்டும் நம் விசுவாசப் பாய்களை விரித்து பயணம்செய்துவிட்டு, காற்று வீச ஆரம்பித்தவுடன் பாய்களைச் சுருட்டிவைக்கக்கிறவர்களாக இருக்கக்கூடாது.

தேவன் பெர்கமு சபையை அதிகமாகப் பாராட்டினர். ஏனென்றால், அவர்கள் கிறிஸ்துவையும், தங்கள் விசுவாசத்தையும் தைரியமாக அறிக்கைசெய்தார்கள். "உன் கிரியைகளையும், சாத்தானுடைய சிங்காசனமிருக்கிற இடத்தில் நீ குடியிருக்கிறதையும், நீ என் நாமத்தைப் பற்றிக்கொண்டிருக்கிறதையும், சாத்தான் குடிகொண்டிருக்கிற இடத்திலே உங்களுக்குள்ளே எனக்கு உண்மையுள்ள சாட்சியான அந்திப்பா என்பவன் நாட்களிலும் என்னைப் பற்றும் விசுவாசத்தை நீ மறுதலியாமலிருக்கிறதையும் நான் அறிந்திருக்கிறேன்" *(வெளி. 2:13)*. அந்த நாட்கள் மிகக் கொடுமையான நாட்கள். நீதிமன்றங்களில் நீதிபதிகள் நீதிபரிபாலனம் செய்யவில்லை. நியாயமான நீதி வழங்கப்படவில்லை. சாத்தான் நீதிமன்றத்தில் நீதிபதியாக இருந்தால் எப்படி அநீதி வழங்குவானோ அப்படி அநீதிதான் வழங்கப்பட்டது. கிறிஸ்தவர்களுக்குப் பெரும்பாலும் மரண தண்டனையே வழங்கப்பட்டது. கிறிஸ்தவர்கள் கொல்லப்பட்டார்கள். கொடூரமான கொலைகள் சபைக்குள் நிகழ்ந்தன. ஆனாலும், அவர்கள் தங்களுக்காக இரத்தம் சிந்திய கிறிஸ்துவை மறுதலிக்காமல் அறிக்கைசெய்தார்கள்.

அறிக்கை செய்வதற்கேற்ற சாதகமான நேரம் வரும்வரை கடையை மூடிவிட்டு, அறிக்கை செய்வதை அலமாரியில் வைத்துவிட்டுப் பூட்டிவிடலாமா? "விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராட" வேண்டும் *(வ. 12)* என்று பவுல் சொல்வதின் பொருள் என்ன? "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பிரசன்னமாகும்வரைக்கும், நீ இந்தக் கற்பனையை மாசில்லாமலும், குற்றமில்லாமலும் கைக்கொள்ளும்படிக்கு எல்லாவற்றையும் உயிரோடிருக்கச்செய்கிற தேவனுடைய சந்நிதானத்திலேயும், பொந்திபிலாத்துவின் முன்னின்று நல்ல அறிக்கையைச் சாட்சியாக விளங்கப்பண்ணின கிறிஸ்து இயேசுவினுடைய சந்நிதானத்திலேயும் உனக்குக் கட்டளையிடுகிறேன்" *(வ. 13, 14)*. நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பாதகமான சூழ்நிலையிலும் தன் ஜீவனை இழப்பதையே தெரிந்துகொண்டார்.

அகுஸ்தீன் என்பவர் *அறிக்கைகள்* என்ற தன் புத்தகத்தில் விக்டோரினஸ் என்ற ஒரு பிரபல ரோமப் பேச்சாளரைப்பற்றிப் பேசுகிறார். இவர் இலக்கியத்தில் அதிக ஈடுபாடுகொண்டிருந்தார். இவர் தன்

கடைசி காலத்தில் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார். அதன்பின் சிம்பிளிசியானுஸ் என்ற பரிசுத்த வானிடம் சென்று, "நான் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறேன். எனவே, நான் இப்போது கிறிஸ் தவன்," என்று சொன்னார். ஆனால், சிம்பிளிசியானுஸ் அதை நம்ப மறுத்துவிட்டார். "நீர் பரிசுத்த வான்கள் கூடுகிற சபைக்கு வந்து இயேசு கிறிஸ்துவை அறிக்கை செய்யாதவரை நீர் சொல்வதை நான் நம்பமாட்டேன். நீர் சபைக்கு வருவதை உம் நண்பர்கள் பார்க்க வேண்டும். அதுவரை உம்மை நான் கிறிஸ்தவனாக ஏற்றுக்கொள்ளமாட்டேன்," என்று சொன்னார். அதைக் கேட்டவுடன், அவர் பக்கத்திலிருந்த கட்டிடத்தைக் காட்டி, கிண்டலாக, "இந்த சுவர்களுக்குள் வந்தால்தான் நான் கிறிஸ் தவனா? நான் பகிரங்கமாக அறிக்கைசெய்ய வேண்டுமா?" என்று கேட்டார். சிம்பிளிசியானுஸ், "ஆம்" என்று சொல்லி விட்டுவிட்டார். வயதான காலத்தில்தான் அவர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டார். எனினும், அவர் புதிய விசுவாசிதானே! சில காலங்கள் கடந்துசெல்கின்றன. அவர் விசுவாசத்தில் உறுதிப்படுகிறார். அப்போது அவர் தன்னைத்தானே ஒரு கேள்வி கேட்க ஆரம்பித் தார். "நான் இன்னும் இயேசு கிறிஸ்துவைக்குறித்து வெட்கப்பட்டால், கிறிஸ்து பிதாவின் மகிமை யோடு திரும்பிவரும்போது அவர் என்னைக்குறித்து வெட்கப்படுவாரே!" என்ற எண்ணம் அவருக்குள் எழுகிறது. உடனே உணர்வடைந்து எழுந்து மீண்டும் சிம்பிளிசியானுசிடம் சென்று, தான் சபைக்கு வருவதற்குத் தயாராக இருப்பதாகக் கூறினார். அங்கு அவர் தன் விசுவாசத்தை அறிக்கை செய் தார். "இத்தனை ஆண்டுகள் நான் இலக்கியத்தை அறிக்கைசெய்திருக்கிறேன். இப்போது கிறிஸ் துவை விசுவாசிக்கிறேன் என்று சொல்வதற்கு எனக்குப் பயமில்லை," என்று அறிக்கை செய்தார்.

கிறிஸ்து, இருதயம் வாய் ஆகிய இரண்டிலும் இருக்க வேண்டும் என்று தேவன் கோருகிறார். "நீதி யுண்டாக இருதயத்தில் விசுவாசிக்கப்படும். இரட்சிப்புண்டாக வாயினால் அறிக்கைபண்ணப்படும்" (ரோமர் 10:10). இருதயத்தில் விசுவாசம் இல்லாமல் வாயினால் அறிக்கைபண்ணுவது மாய்மாலம், வெளிவேஷம். ஆனால், இருதயத்தில் விசுவாசம் இருந்து அதை அறிக்கை செய்யாமல் இருந்தால் அது மாய்மாலமும், கோழைத்தனமுமாகும்.

**தேவன் கிறிஸ்துவை நமக்குத் தந்திருக்கிறார்.**

கிறிஸ்துவே தேவன் தம் பரிசுத்தவான்களிடம் ஒப்புக்கொடுத்திருக்கிற பெரிய பொக்கிஷம். இந்தப் பொக்கிஷத்தைப் பாதுகாப்பதற்கும், பராமரிப்பதற்கும் நாம் பிரயாசப்பட வேண்டும். இதற்குத் தீங்கு விளைவிக்க முயற்சிக்கிற எல்லாவற்றையும் எதிர்த்துநின்று, அதைக் காத்துக்கொள்ள வேண்டும். நாம் அவரை நம்பி அவரிடத்தில் ஒப்புக்கொடுத்திருப்பதை அவர் நிச்சயமாகக் காத்துக்கொள்வார். "நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள்வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவரா யிருக்கிறார்" (2 தீமோ. 1:12). அதுபோல, தேவன் நம்மை நம்பி நம்மிடத்தில் ஒப்புவித்திருப்பதை நாம் காத்துக்கொள்ள வேண்டாமா? தேவன் கிறிஸ்துவை நமக்குத் தந்திருக்கிற். கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தை அவர் நமக்குத் தந்திருக்கிறார். "பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக் கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் போராட வேண்டும்" (யூதா 3). "நீ இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தோடும் அன்போடும் என்னிடத்தில் கேட்டிருக்கிற ஆரோக்கியமான வசனங்களின் சட்டத்தைக் கைக்கொண்டிரு. உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட அந்த நற்பொருளை நமக்குள்ளே வாசம்பண்ணுகிற பரிசுத்த ஆவியினாலே காத்துக்கொள்," (2 தீமோ. 1:13, 14) என்று பவுல் தீமோத்தேயுவை எச்சரிக்கிறார். இது தீமோத்தேயுவுக்கு மட்டும் அல்ல. நமக்கும் பொருந்தும்.

ஓர் அரசன் தன் செல்வங்களையெல்லாம் ஒருவனிடத்தில் ஒப்புக்கொடுத்துப் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளச் சொன்னால், அவை தொலைந்துபோய்விடக்கூடாது அல்லது யாரும் அவைகளைத் திருடிக் கொண்டுபோய்விடக்கூடாது என்பதற்காக எவ்வளவு கண்ணுங்கருத்துமாய் இருப்பான்! தேவ னுடைய பொக்கிஷத்தைப் பாதுகாப்பது கிறிஸ்தவனின் கடைமையில்லையா? இது எவ்வளவு பெரிய பொறுப்பு! கிறிஸ்து தேவன் தம் பரிசுத்தவான்களிடம், தாம் தெரிந்துகொண்ட சாட்சிகளிடம், ஒப்புக்கொடுத்திருக்கிற பெரிய பொக்கிஷமாகும். இந்தப் பொக்கிஷத்தை நாம் எல்லா மனிதர் களுக்குமுன்பாகவும் விடுதலையோடு அறிக்கைசெய்து சாட்சியாக வாழவேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.